# "பிரதம மந்திரியின் ஏழைகள் நல உதவித் திட்டத்தின்" கீழ் கொரோனா வைரஸ் தாக்கத்திற்கான நிவாரண உதவி

**Indian Banks' Association**

தடுப்பீர் !
கொரோனா வைரஸ் பரவுவதை...
பரப்புவீர்!
இந் நிவாரண உதவிச் செய்தியை...

## அக்கறையுடன் - உங்கள் மற்றும் உங்கள் நலனில்.

கொரோனா வைரஸ் தாக்கி வரும் சூழ்நிலையில், பிரதம மந்திரியின் (ஜன்தன்) மக்கள் நிதித் திட்ட (PMJDY) சேமிப்பு கணக்கு உள்ள பெண் வாடிக்கையாளர் நபர் ஒருவருக்கு நிவாரணமாக, மாதம் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் ( ஐநூறு ரூபாய் மட்டும்), "பிரதம மந்திரியின் ஏழைகள் நல உதவித் திட்டத்தின்" கீழ் **(Pradhan Mantri Garib Kalyan Yojana – PM GKY)** வரும் மூன்று மாதங்களுக்கு வழங்கப்பட உள்ளது, வாடிக்கையாளர் சேமிப்பு கணக்கில் இந்த உதவித் தொகை நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

வாடிக்கையாளர் வங்கிக் கணக்கில் இப் பணம் நேரடியாக வரவு வைக்கப்படுவதால், பணம் பாதுகாப்பாக இருக்கும். எனவே, வங்கிக் கிளைக்கு உடனே விரைந்து செல்லத் தேவையில்லை; வாடிக்கையாளரால் எப்போது முடிகிறதோ, அப்போது அப்பணத்தை எடுத்துக் கொள்ளலாம்.

எனினும், பயனாளிகளுக்கு, வரும் சில நாட்களில், உடனே அப் பணம் தேவைப்பட்டால் தங்கள் வங்கிக் கணக்கின் **கடைசி எண்ணை** அடிப்படையாகக் கொண்டு, கீழ்க் கண்ட கால அட்டவணையின் படி பணம் பட்டுவாடா செய்யப்படும். இது சமூக விலகலை (Social Distancing ) மேற்கொள்ளும் வகையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | சேமிப்பு கணக்கின் கடைசி எண் | பணப் பட்டுவாடா நாள் |
|---|---|---|
| 1 | 0 மற்றும் 1 | 03.04.2020 |
| 2 | 2 மற்றும் 3 | 04.04.2020 |
| 3 | 4 மற்றும் 5 | 07.04.2020 |
| 4 | 6 மற்றும் 7 | 08.04.2020 |
| 5 | 8 மற்றும் 9 | 09.04.2020 |

ஏப்ரல் 9 ஆம் தேதிக்குப் பின், வங்கிக் கிளையில் தங்கள் வசதிப்படி வாடிகையாளர் பணம் எடுக்க முடியும்.

மேலும், வங்கிக் கிளையில் கூட்டத்தைத் தவிர்க்க, அருகிலுள்ள ஏ.டி.எம். மையம் (ரூபே பற்று அட்டை பயன்படுத்தி), உங்கள் பகுதி வங்கி வணிகத் தொடர்பாளர் மற்றும் மின்னணு பணப் பரிவர்த்தனை இயந்திரத்தை (நாள் ஒன்றுக்கு 2000 ரூபாய் வரை) பயன்படுத்தியோ பணத்தை எடுத்துக் கொள்ளலாம்.

தற்போ, மத்திய அரசு அறிவித்துள்ள படி, ஏடிஎம் இயந்திரத்திலிருந்து பணம் எடுக்க சேவைக் கட்டணம் எதும் இல்லை.

ஒவ்வொருவரின் பாதுகாப்பிற்கும், சுமூகமான வாழ்விற்கும் உதவத் துணை நிற்க வேண்டுகிறோம்.

நீங்கள் நலமுடன் வாழ, நாங்கள் அன்புடன் வேண்டுகிறோம்.



**Help us to Serve you better.**

**April 3, 2020**